**கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் செயற்திட்ட தயார்படுத்தல் வசதி- 2025**

-------------------------------------------------------------------------------------------------------------

கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் செயற்திட்ட தயார்படுத்தல் வசதியின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதிய 3425 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.03(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. முன்னுரிமை போக்குவரத்துச் செயற்திட்டங்களின் தயார்நிலையை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கொழும்பை அண்டிய புகையிரத மேம்படுத்தலை வடிவமைப்பதற்கான சாத்தியவள கற்கையை மேற்கொள்வதல் மற்றும் விரிவான வடிவமைமைப்பை தயாரித்தல் போன்றவற்றிற்கான மதியுரை சேவைகளை வழங்குதல் எனும் பெயரிலான ஒரு கூறின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,654.54 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 11.36 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 1,456.50 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 9.99 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் (ஏடிபீ) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 198.04 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் முடிவுறுத்தல் திகதி 2023 யூன் 30 வரையிலும் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து செயற்திட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்கீட்டுக் குறைபாடு | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| உரிமை மாற்றக்கூற்றின் படி, 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று தேறிய சொத்துப் பெறுமதி ரூபா 5,749.10 மில்லியனாக இருந்தது. எனினும், அது நிதி நிலைமைக்கூற்றில் ரூபா 5,712.53 மில்லியனாகக் இனங்காட்டப்பட்டிருந்தது. எனவே, அந்த இரு மீதிகளுக்கும் இடையில் ரூபா 36.57 மில்லியன் வித்தியாசம் இனங்காணப்பட்டது. | 36.57 | ரூபா 36,566,488 வித்தியாசம் என்பது முன்னைய காலப்பகுதிகளுக்கான கடன் வட்டியாகும். இது 2025 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றக்கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அது சரியானதாகும். | 2026 ஆம் ஆண்டின் இறுதியில் நிதி நிலைமைக்கூற்றில் இனங்காட்டப்பட்ட வித்தியாசம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கில் பதிவு செய்யப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 3.1.1 **GOSL ஆல் நிதியளிக்கப்பட்ட மீள்குடியேற்றச் செயற்பாடுகள்**<br>(அ) நாவல கட்டம் 01 வீட்டுத் தொகுதியின் நிர்மாணப் பணிகளின் பௌதீக செயல்நடவடிக்கை 39 சதவீதமாகும். அதன் நிர்மாணச் செயற்பாடுகள் 3 ஆண்டுகளுக்கும் மேலாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமையால், நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ஒரு வீட்டு அலகின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 5,000,000 இலிருந்து ரூபா 10,000,000 ஆக அதிகரிக்கும். இதனால், 406 வீட்டு அலகுகளுக்குப் பதிலாக | நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) கொலம்பகே மாவத்தை முதலாம் கட்ட (Phase I) வீட்டுத் திட்டத்திலிருந்து 100 வீட்டு அலகுகளைக் கொள்வனவு செய்வதற்கு 2025 மார்ச் 17 ஆம் திகதிய மற்றும் AMP/25/0371/809/031 இலக்கமுடைய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அனுப்பிவைக்கப்பட்ட வரைவுப் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி, நிர்மாணப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் இந்த 100 வீட்டு அலகுகளையும் 2028 ஜூன் 30 | புரிந்துணர்வு உடன்படிக்கையில் (MoU) கைச்சாத்திடுவதற்கு மற்றும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 100 வீடுகளுக்கு தலா ரூபா 10,000,000 வீதம் செலுத்துவதற்காக 2025 மார்ச் 17 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை ஒப்புதல் பெறப்பட்டு 06 மாதங்களுக்குப் பின்னர் வரைவு செய்யப்பட்டு 2025 நவம்பர் 06 ஆம் திகதி போக்குவரத்து அமைச்சுக்கு அனுப்பப்பட்ட போதிலும், 2026 பெப்ரவரி மாதம்கூட புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆம் திகதிக்குரியவாறு மட்டுமே கையளிக்க முடியும் எனவும், ஒரு அலகின் திருத்தப்பட்ட வீதம் ரூபா 3.58 மில்லியன் எனவும் நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) சுட்டிக்காட்டியுள்ளது. எவ்வாறாயினும், திட்டக் காலம் 2027 ஜூன் மாதத்தில் நிறைவடைய உள்ளமையால், மீள்குடியேற்றச் செயற்பாடுகளைத் திட்டக் காலத்திற்குள் நிறைவேற்ற முடியாது. எனவே, கௌரவ போக்குவரத்து அமைச்சரின் பணிப்புரைக்கமைய, சீன நிதியுதவி அளிக்கும் வீட்டுத் திட்டத்தின் கீழ் மஹரகம பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டத்திலிருந்து வீடுகளைக் கையகப்படுத்துவது தொடர்பாக 2025 நவம்பர் 21 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் (UDA) புரிந்துணர்வு உடன்படிக்கையில் (MoU) கைச்சாத்திடுவதற்காக 2025 மார்ச் 17 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், ஏனைய தொடர்புடைய செயற்பாடுகளை நிறைவு செய்ய வேண்டிய அவசியத்தின் காரணமாக, முன்னைய காலப்பகுதியில் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், புரிந்துணர்வு உடன்படிக்கையை (MoU) நடைமுறைப்படுத்துவதற்காகக் குறிப்பிடப்பட்ட விடயங்களை விரைவாக நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில், நாவல கட்டம் 02 வீட்டுத் தொகுதிக்கான வீடுகளுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 576,000,000 இல் ரூபா 544,320,000 அல்லது 95 சதவீத தொகையானது செலுத்தப்பட்டிருந்த போதிலும், பூர்த்தியடையாத கழிவுநீர் முறைமை காரணமாக 144 | களனி பள்ளத்தாக்கு (KV) புகையிரத பாதைகளின் எல்லைக்குள் மீள்குடியேற்றுவதற்காக திட்டப் பகுதிக்கு அருகில் வேறு தொடர்மாடிக் குடியிருப்புத் தொகுதிகள் எதுவும் இல்லாத காரணத்தினால் UDA க்குச் சொந்தமான தொடர்மாடிக் குடியிருப்புத் தொகுதிகளிலிருந்தே வீட்டு அலகுகளைப் | ஒப்பந்தக்காரரின் தவறுகள் காரணமாக திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள பாதகமான தாக்கத்தைத் தணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வீட்டு அலகுகள் இதுவரை திட்டத்திற்குக் கையளிக்கப்படவில்லை. | பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தமையால், இத்தொடர்மாடிக் குடியிருப்புத் தொகுதிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையைத் திட்டம் பல சந்தர்ப்பங்களில் நீடிக்க வேண்டியிருந்தது. இவற்றுள் வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள போதிலும், கழிவுநீர் முறைமையின் நிர்மாணப் பணிகள் UDA ஆல் மேற்கொள்ளப்பட்டு வருவதனால், திட்டமானது அதில் நேரடியாகத் தலையிட முடியாது. திட்டமிடப்பட்ட கால அட்டவணையின்படி வீடுகளைக் கையகப்படுத்தும் திறனானது திட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாக மாறியுள்ளமையால், எதிர்காலச் செயற்பாடுகள் MoUs இணங்கவே முன்னெடுக்கப்பட வேண்டும். | |
| (இ) | உடன்படிக்கைகளின்படி செயற் படத் தவறிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் செயல் குறித்து அமைச்சு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதுடன், 2018 ஆம் ஆண்டு முதல் பல சந்தர்ப்பங்களில் வீட்டுத் திட்டங்களின் நிறைவுத் திகதி நீடிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 இல் புதிய புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், களனி பள்ளத்தாக்கு வீதிப் பாதைகளின் எல்லைக்குள் உள்ள குடும்பங்களின் மீள்குடியேற்றமானது 2025 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின்படி, 384 வீட்டு அலகுகளைக் கொள்வனவு செய்வதற்காகப் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் (MoUs) கைச்சாத்திடப்பட்டிருந்தன. எனினும், அரசாங்கத்தின் கொள்கை முடிவு ஒன்றின் அடிப்படையில், இவற்றுள் 144 வீட்டு அலகுகள் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு விடுதி வசதிகளை வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டன. இதன் விளைவாக, அந்த 144 வீட்டு அலகுகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காக 2022 மார்ச் 25 ஆம் திகதியன்று புதிய புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட வேண்டியிருந்தது. அதற்கமைய, கொலம்பகே மாவத்தை இரண்டாம் கட்ட (Phase II) வீட்டுத் திட்டத்திலிருந்து 144 வீட்டு அலகுகளை வழங்குவதற்காகப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்தத்தின்படி வீட்டு அலகுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்திருந்த போதிலும், அடிப்படை வசதிகளை (கழிவுநீர் அகற்றல் முறைமை / மலசல | ஒப்பந்தக்காரரின் தவறுகள் காரணமாக திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள பாதகமான தாக்கத்தைத் தணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கூட முறைமை) வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இவ்வீட்டு அலகுகளை இத்திட்டத்திற்குக் கையளிப்பதில் தாமதம் ஏற்பட்டது. எனவே, குறித்த பணிகள் நிறைவடைந்தவுடன் வீடுகளைக் கையளிக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) இணக்கம் தெரிவித்துள்ளமையால், தொடர்புடைய புரிந்துணர்வு உடன்படிக்கையின் செல்லுபடியாகும் கால எல்லையை நீடிப்பதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. எனவே, அத்தகைய கால எல்லையை நீடிப்பதன் மூலம் ஏற்பட்ட தாமதமானது திட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாகும் | |
| 3.1.2 **நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் மூலம் களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதை எல்லைக்குள் உள்ள அனுமதியற்ற குடியிருப்பாளர்களை மீள்குடியேற்றுதல்** | | |
| (அ) பாதிக்கப்பட்ட குடும்பங்களில், மீளாய்வாண்டின் இறுதியில் 219 குடும்பங்களின் நன்மைகள் உரிமை மதிப்பீட்டுக் குழுவினால் (EAC) தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 05 குடும்பங்களின் பயன் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவுமில்லை. | சீவலிபுரவிலிருந்து பெங்கிரிவத்தை வரையுள்ள 69 குடும்ப அலகுகளில், 33 குத்தகைக்கு விடப்பட்ட கட்டிடங்களை புகையிரதத் திணைக்களம் கையாளுவதுடன், உரிமை மதிப்பீட்டுக் குழு (EAC) வழியாக 7 கோப்புகளுக்கான முடிவுகள் இறுதி செய்யப்பட்டுள்ளன, 16 கட்டிடங்கள் கொலம்பகே மாவத்தை இரண்டாம் கட்டத்தில் புதிய வீதிகளுக்காகக் காத்திருக்கின்றன, அங்கீகரிக்கப்பட்ட 11 கட்டிடங்களில் 10 கட்டிடங்கள் அபிவிருத்திப் பெறுமதிக் கொடுப்பனவுகளைப் பெற்றுள்ளன (ஒன்று ஒப்புதலை மறுத்துள்ளது), மேலும் கடைசி இரண்டு கட்டிடங்கள் சட்டரீதியான அகற்றுதலுக்கு அல்லது நிலுவையில் உள்ள EAC சமர்ப்பிப்புக்கு முகங்கொடுக்கின்றன. இதற்கிடையில், பெங்கிரிவத்தவிலிருந்து | எந்தவித தாமதமுமின்றி நஷ்டஈடுகளை வழங்குவதற்கும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பாதுக்கை வரை, தேசிய மட்டத்திலான குறைதீர்ப்புக் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து மேலதிக மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் 3 கோப்புகள் உட்பட 145 கோப்புகள் EAC க்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கூடுதலாக, அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீடு தேவைப்படும் IV ஆம் பிரிவில் உள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை 6 இலிருந்து 5 ஆகத் திருத்தப்பட்டுள்ளது. தொடர்புடைய கட்டமைப்புக்களுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் இதுவரை கிடைக்கப் பெறாததால், அது குறித்து மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) கட்டம் 1 இன் IV ஆம் பிரிவின் அபிவிருத்திச் செலவை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த 18 குடும்பங்களையும், சுயமாக மீள்குடியேறுவதற்குச் சம்மதித்த 04 குடும்பங்களையும் வெளியேற்றுவது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | பெங்கிரிவத்தவிலிருந்து பாதுக்கை வரையிலான பிரிவில் அபிவிருத்திச் செலவு வழங்கப்பட இருந்த 22 கட்டமைப்புகளில், 18 கட்டமைப்புகளுக்கான அபிவிருத்திப் பெறுமதிக் கொடுப்பனவுகள் இறுதி செய்யப்பட்டுள்ளன. 02 கட்டமைப்புகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகள் தொடர்பாக, தேசிய மட்டத்திலான குறைதீர்ப்புக் குழுவிற்கு அவற்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் பரிந்துரைகள் பெறப்பட வேண்டும். கூடுதலாக, 02 கட்டமைப்புகளின் பாதிக்கப்பட்ட நபர்கள் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்குச் சம்மதிக்கவில்லை. மேலும், சுய-இடமாற்றத்தின் கீழ் இருந்த 04 கட்டமைப்புகளில், 03 கட்டமைப்புகளுக்கான கொடுப்பனவுகள் இறுதி செய்யப்பட்டுள்ளதோடு, ஒரு கட்டமைப்புக்கான இறுதி முடிவு 2026 மே 05 ஆம் திகதி நடைபெற்ற உரிமை மதிப்பீட்டுக் குழுவினால் எடுக்கப்பட்டது. அதற்கமைய, குறித்த கட்டமைப்புக்கான உரிமைகள் எதிர்காலத்தில் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன. | எந்தவித தாமதமுமின்றி நட்டஈடுகளை வழங்குவதற்கும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) தீர்ப்பளிக்கப்படாத வழக்குகள் காரணமாக 26 குடும்பங்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்திச் சபையினால் (NHDA) நிர்மாணிக்கப்பட்ட 66 வீடுகள் மற்றும் புகையிரத திணைக்களம் மற்றும் கொழும்பு மாநகர சபை ஆகிய இரண்டினதும் வசம் உள்ளமையால் 9 வீடுகள் உள்ளிட்ட 101 வீட்டு அலகுகள் தொடர்பாக தீர்க்கப்படாத பிரச்சினைகள் இருந்தன. அதனால், மீளாய்வாண்டின் இறுதியில் புகையிரத அபிவிருத்தி, மீள்குடியேற்றம் மற்றும் காணி கையகப்படுத்தல் செயற்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நன்மைகளைப் புறக்கணித்துவிட்டு, புகையிர பாதை எல்லையினுள் தொடர்ந்தும் தங்கியிருக்கும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் கட்டிடங்களையும் அகற்றுவதற்காக, புகையிரதத் திணைக்களத்திற்குச் சட்ட நடவடிக்கைக்காக அனுப்பப்பட்ட குடும்ப அலகுகளிலிருந்து அகற்றப்பட வேண்டிய 14 கட்டமைப்புகள் இன்னும் மீதமுள்ளன. மேலும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான காணித் துண்டுகளில் அமைந்துள்ள கட்டமைப்புகள் தொடர்பான காணி கையகப்படுத்தல் செயற்பாடானது, காணி கையகப்படுத்தல் நடைமுறையின் கீழ் முன்னெடுப்பதற்காக புகையிரதத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | எந்தவித தாமதமுமின்றி நட்டஈடுகளை வழங்குவதற்கும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடி யேற்றத்தில் ஏற்பட்ட தாமதமானது புகையிர பாதையின் அபிவிருத்தியை மேலும் தாமதப்படுத்தியுள்ளதுடன், நட்டஈடு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்ட புகையிரத பாதை எல்லைக்குள் மீண்டும் அனுமதியற்ற நிர்மாணங்கள் இடம்பெறுவதற்கான அபாயத்திற்கும், மதிப்பீடுகள் மற்றும் கையகப்படுத்தல்களில் ஏற்பட்ட தாமதமானது மேலதிக செலவுகளுக்கும் மற்றும் திட்ட நிர்வாகச் செலவுகள் தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கும் வழிவகுத்துள்ளது. | புகையிர பாதையின் எல்லைக்குள் வசிக்கும் அனுமதியற்ற குடியேற்ற வாசிகளுக்கு நன்மைகள் வழங்கப்பட்டதன் பின்னர், அக்காணி புகையிரதத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | எந்தவித தாமதமுமின்றி நட்டஈடுகளை வழங்குவதற்கும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |